செய்தி வெளியீடு எண்.06-2017 நாள்: 03.05.2017

## விழுப்புரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் வேளாண்மை தொழில்நுட்ப பணிகளை மேற்கொள்ள தகுதிவாய்ந்த உதவி தொழில் நுட்ப மேலாளர்களை தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் பணி நியமன முகமை மூலம் நிரப்பிட தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

விழுப்புரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வேளாண்மை தொழில்நுட்ப பணிகளை மேற்கொள்ள தகுதிவாய்ந்த உதவி தொழில் நுட்ப மேலாளர்களை தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் பணி நியமன முகமை மூலம் நிரப்பிட திட்டமிடப்பட்டுள்ளது. பணி நியமன முகமை, பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்து வழங்குவதில் குறைந்தப்பட்சம் 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய உள்ள பணியாளர்கள் வேளாண்மை தொழில்நுட்பம் மற்றும் அதைச் சார்ந்த பணிகளை மேற்கொள்ள வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த இளநிலை பட்டப்படிப்புடன் கணினி இயக்கத்திறன் பெற்றிருக்க வேண்டும்.

உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பணியிடங்கள் யாவும் தொகுப்பூதிய அடிப்படையில் பணியமர்தப்படவுள்ளது. தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர்களுக்கு மாதாந்திர தொகுப்பூதியமாக ரூ.11,000/- மற்றும் இதர செலவினப்படி ரூ.4000/- ஆக மொத்தம் ரூ.15,000/- இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

எனவே இப்பணியை மேற்கொள்ள தகுதி வாய்ந்த பதிவுத்துறைகளின் மூலம் பதிவு செய்து செயல்பட்டு வரும் பணி நியமன முகமைகள் பணியாளர்களை தேர்வு செய்து வழங்க தங்களது பணி நியமன முகமையின் அடிப்படை விவரங்கள், அனுபவம் மற்றும் ஒப்பந்த பணியாளர்களை வழங்க சேவை கட்டணம் ஆகியவற்றை திட்ட இயக்குநர்/வேளாண்மை இணை இயக்குநர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், விழுப்புரம் என்ற முகவரிக்கு 22.05.2017 அன்று மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். தேர்வு செய்யப்படும் பணி நியமன முகமை உடனடியாக ஒப்பந்த பணியாளர்களை தேர்வு செய்து வழங்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்க்ள தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.